ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1967/15 - 2016 මැයි මස 18 වැනි බදාදා - 2016.05.18

*1967/15 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்திச் கருத்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்*

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்திச் கருத்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், நகர அபிவிருத்தி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் பரிந்துரையின்பேரில் பின்வரும் அட்டவணை இல. I மற்றும் II இல் விபரிக்கப்பட்டுள்ள காணிப்பகுதிகள் மாலபே பஸ்தரிப்பு நிலையத்தை நிர்மாணித்தல் உட்பட நகர அபிவிருத்தி கருத்திட்டங்களை செயற்படுத்துவதற்காக உடன்தேவைப்படுகின்றது எனக் கருதுவதனால், குறிப்பிட்ட காணிகள் தொடர்புடைய நோக்கத்திற்குத் தேவைப்படுகிறதென இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.*

மைத்திரிபால சிறிசேன,
சனாதிபதி.

சனாதிபதி செயலகம்,
கொழும்பு,
2016, மே 16.

**அட்டவணை I**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கடுவெல பிரதேச செயலகப் பிரிவின், கடுவெல மாநகர சபை அதிகாரப் பிரதேசத்திற்குள், பல்லேபத்துவ ஹேவாகம் கோரளை, பிரிவு இல. 7 தலங்கம வடக்கில் அமைந்துள்ள காணிக்கு உரியதாக வரையப்பட்டுள்ள 3762 ஆம் இலக்க அளவைப் படத்தின் I ஆம் இலக்கக் காணித்துண்டாகக் காட்டப்பட்டுள்ளதும், 1 ஏக்கர் 0றூட் 38.60 பேர்ச்சஸ் (0.5023 ஹெக்டெயார்) விஸ்தீரணமுள்ளதுமான தொம்பகஹவத்த மறுபெயர் தெம்புகஹவத்த மறுபெயர் மாலபே பஸ்தரிப்பு நிலையம் எனும் காணிக்கு உரிய எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : உடவத்த வீதியும் புதிய கண்டி வீதியும் ;
கிழக்கு : புதிய கண்டி வீதி, தொம்பகஹவத்த மற்றும் அத்துருகிரிய வரையான வீதி;
தெற்கு : மெற்றோ வர்த்தகத் தொகுதி மற்றும் மாலபே சந்தை ;
மேற்கு : மாலபே சந்தை, கடுவெல பிரதேச செயலகம், மாலபே தபால் அலுவலகம் மற்றும் உடவத்த வீதி.

**அட்டவணை II**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கடுவெல பிரதேச செயலகப் பிரிவின், கடுவெல மாநகர சபை அதிகாரப் பிரதேசத்திற்குள், பல்லேபத்துவ ஹேவாகம் கோரளை, பிரிவு இல. 7 தலங்கம வடக்கு எனும் கிராமத்தில் அமைந்துள்ள காணிக்கு உரியதாக வரையப்பட்டுள்ள உத்தேச வரைபடத்தில் I ஆம் இலக்க காணித்துண்டாகக் காட்டப்பட்டுள்ளதும், 0 ஏக்கர் 3றூட் 30 பேர்ச்சஸ் (0.3795 ஹெக்டெயார்) விஸ்தீரணமுள்ளதுமான தொம்பகஹவத்த மறுபெயர் தெம்புகஹவத்த எனும் காணிக்கு உரிய எல்லைகள் பின்வருமாறு :-

*வடக்கு* : புதிய கண்டி வீதியும் ;
*கிழக்கு* : அத்துருகிரிய வீதியும் மாலபே பஸ்தரிப்பு நிலையக் காணியும் ;
*தெற்கு* : மாலபே பஸ்தரிப்பு நிலையக் காணி ;
*மேற்கு* : மாலபே பஸ்தரிப்பு நிலையக் காணி.

*6- 89/1*

---

**1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்திச் கருத்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்**

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்திச் கருத்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், நகர அபிவிருத்தி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் பரிந்துரையின்பேரில் பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு, பத்தரமுல்ல நகர அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் பல்மாடி வாகனத் தரிப்பு நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக உடன்தேவைப்படுகின்றதென கருதுவதனால் குறிப்பிட்ட காணி தொடர்புடைய நோக்கத்திற்குத் தேவைப்படுகிறதென இக்கட்டளைமூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.

மைத்திரிபால சிறிசேன,
சனாதிபதி.

சனாதிபதி செயலகம்,
கொழும்பு,
2016, மே 16.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கடுவெல பிரதேச செயலகப் பிரிவின், கடுவெல மாநகர சபை அதிகாரப் பிரதேசத்திற்குள், பல்லேபத்துவ ஹேவாகம் கோரளை, பத்தரமுல்ல கிராமத்தில் அமைந்துள்ள காணிக்கு உரியதாக வரையப்பட்டுள்ள 7940 ஆம் இலக்க அளவைப் படத்தின் துண்டு இல. ஏ. ஆகக் காட்டப்பட்டுள்ளதும் 0 ஏக்கர் 3 றூட் 11.50 பேர்ச்சஸ் (0.3326 ஹெக்டெயார்) விஸ்தீரணமுள்ளதுமான கொடெல்லவத்தை மறுபெயர் மில்லகாவத்தை மற்றும் கொட்டணுவேகும்புர எனும் காணிக்கு உரிய எல்லைகள் பின்வருமாறு :-

*வடக்கு* : கால்வாயும் சோலைவரி இல. 21/1 கொண்ட கடுவெல வீதியில் அமைந்துள்ள வீடு ;
*கிழக்கு* : சோலைவரி இல. 21/1, 19/2 மற்றும் 15 கொண்ட கடுவெல வீதியில் அமைந்துள்ள வீடு மற்றும் துப்பஹிகே கரோலிஸ் மற்றும் ஏனையோருக்குச் சொந்தமான காணி ;
தெற்கு : அரச காணியும் கடுவெல வீதி சோலைவரி இல. 19/2, 15 மற்றும் 11 கொண்ட கடுவெல வீதியில் அமைந்துள்ள வீடும் கால்வாயும் ;
மேற்கு : அரச காணியும் கால்வாயும்.

*6- 89/2*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.